உ

ஸ்ரீ ராம ஜெயம்

## வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள்



# கீர்த்தனைகள்

உ

ஸ்ரீ ராமஜெயம்

# வண்ணை

## ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள்

# கீர்த்தனைகள்

இயற்றியவர் :-

இயலிசை வாரிதி, கவிமாமணி, கலாரத்னா,

கலாபூஷணம், முத்தமிழ்க்கலாநிதி,

மஹாவித்துவான்

**பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர்**

**M.A - J.P அவர்கள்**

இந்நூல் வண்ணை

ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள்

தேவஸ்தான வெளியீட்டாக

வெளியிடப்பெற்றது.

2016

உ
ஸ்ரீ ராமஜெயம்

# வெளியீட்டுரை

பகவான் ஸ்ரீமந் நாராயணன் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காகக் காலங்கள் தோறும் திருவவதாரம் செய்கிறார். பகவானது அவதாரங்களில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரமும் ஸ்ரீ இராமாவதாரமும் சிறப்பாகப் போற்றப்படுகின்றன. மனித வாழ்க்கைநெறிக்கு அவை வழிகாட்டியாக இருக்கின்றன.

அழகான குழந்தையைக் கண்டால் கண்ணன் போல் இருக்கிறான் எனக்கூறுவது உலக வழக்கம். புராண இதிகாசங்களில் மிகவும் சிறப்புடைய குழந்தையாகவும், குமரனாகவும், வாலிபனாகவும், வீரனாகவும், குடும்பஸ்தனாகவும், மிகவுயர்ந்த ஞானகுருவாகவும், சிறந்த ராஜதந்திரியாகவும் விளங்கிய பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பிள்ளைப்பருவத் திருவிளை யாடல்களை ஸ்ரீகிருஷ்ணலீலா வைபவமாகக் கொண்டாடும் வழக்கம் இந்தியாவின் பல இடங்களிலும் நிகழ்ந்து வருகிறது. ஆழ்வார்களும், ஆண்டாளும், மஹாகவி பாரதியும் இன்னும் பல கவிஞர்களும் கண்ணனின் லீலைகளை அவரது அருமை பெருமை களையெல்லாம் மிக அற்புதமாக அழகு தமிழில் பாடி எமக்களித்துள்ளனர். உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத பகவத்கீதை என்னும் ஆன்மீக ஞானநூலை பகவான் எமக்களித் துள்ளார். ஸ்ரீராமபிரானும் தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை, தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை எனும் வாக்கிற்கமையச் செயற்பட்டதுடன் அடக்கம், பொறுமை, பணிவு, தியாகம், அன்பு, வீரம் போன்ற நற்குணங்களின் வழிநடந்து எம்மை ஆற்றுப் படுத்துகிறான்.

இவ்வாறு சிறப்புமிக்க விஷ்ணுவின் தெய்வீக அவதாரங் களை போற்றி உலகோர் உய்ய வேண்டும் எனும் பெருநோக்கில்

ஆதிகாலத்தில் முனிவர்களும் மஹாபுருஷர்களும் பல உபதேசங் களைச் செய்து வந்தனர். பின்பு காலக்கிரமத்தில் ஆழ்வார்களும் அநேக பக்தர்களும் திருவவதாரம் செய்து கணக்கற்ற பாடல்களை ஆக்கி இறைவனை அடையும் வழிகளைக் கூறிச்சென்றனர்.

இவ்வகையில் இணுவையூர் கவிமாமணி பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்கள் பெருமாளின் மேல் பக்திரஸம் சொட்டும் அற்புதமான கீர்த்தனைகளை ஆக்கி உபகரித்துள்ளார். ஐயா அவர்கள் இலங்கையில் மட்டுமல்லாது தமிழ்மக்கள் பரந்துவாழும் அனைத்து தேசங்களிலுமுள்ள பல்வேறு ஆலயங்களுக்கும் திருவூஞ்சல் பாடல்கள், கீர்த்தனைகள், திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் போன்றவற்றைக் கேட்போர் மனத்தை உருக்கும் வண்ணம் ஆக்கி வழங்கியுள்ளார்கள். சைவமும் தமிழும் தளைக்கும் பணியை ஐயா அவர்கள் இதன்மூலம் ஏற்படுத்தி உள்ளார்கள்.

மேலும் தான் குடியிருக்கும் இணுவில் பதியில் உறைந்து இருக்கும் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் கண்ணனுக்கு ஓர் ஆலயம் அமைத்து ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி விழாவை விமரிசையாக நடாத்தி வருவது கண்ணன் மேல் ஐயா அவர்கள் கொண்ட அளவுகடந்த பக்தியை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் தனது ஆக்கங்களைக் கண்ணனுக்கு அர்ப்பணித்துச் செயற்பட்டும் வருகிறார்.

1972ம் ஆண்டு மார்கழி மாதம் வெளியிடப்பட்ட இந்நூலை மறுபதிப்புச் செய்வதற்கு வேண்டிய ஆலோசனைகள் வழங்கியும், ஒப்புநோக்கியும் உதவிய கவிமாமணி ஐயா அவர்கட்கு எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு அவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழுக்கும் சமயத்திற்கும் தொண்டாற்ற வேண்டும் என ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாளைப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் இந்நூலை வெளியிட அனுமதி தந்த தேவஸ்தான ஆதீன மஹாசபையினருக்கும், இந்நூலாக்கத்திற்கான நிதியினைத் தந்துதவிய ஆறுமுகம் ரெக்ரைல்ஸ் உரிமையாளரான திரு.ஆ.கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும், லிங்கன் கிறீம் ஹவுஸ் உரிமையாளரான திரு.நா.அப்புலிங்கம் அவர்களுக்கும், ஆரணி மில் உரிமையாளரான திரு.வை.அருணகிரி அவர்களுக்கும், முன் அட்டைப்படத்தைத் தந்துதவிய கொனிக்கா கலர்லாப் உரிமையாளரான திரு.வீ.ஸ்ரீதரன் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கி நூலை மெருகூட்டிய பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர் அவர்கட்கும் சிறந்த முறையில் அச்சுப் பதிப்புச் செய்த சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ் உரிமையாளர், ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் கருணைக் கடலாம் ஸ்ரீ வெங்கடேசவரதனின் பரிபூரண அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்.

**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**
**ஹரே கிருஷ்ண ஹரே**
**கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரேஹரே**

**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**ஸ்ரீவத்ஸ.வ.இராஜேஸ்வரக்குருக்கள்**
**பிரதமகுரு - ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.**

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

# அணிந்துரை

**"நாராயணா எனும் மந்த்ரம் - மனமே**
**நாளும் ஜெபிப்பாய் திவ்ய மோகம் நிரந்தரம்**
**வாராது தீவினைகள் வரதராஜன் அருளால்**
**பாராயணம் என்றும் பக்தியுடன் புரிவாய்**
**ஸ்ரீதரன் மாதவன் சிறந்த அருள் தருவான்**
**பதமலர் தனைப் பக்தியுடன் துதிப்பாய்**
**பூதலந்தனில் வண்ணைப்பதி வெங்கடேஸ்வரன்**
**மாதவன் மாலவன் மாயவன் திருநாமம்"**

என்ற இப்பாடல் நாராயணனைப் பாராயணத்தின் மூலம் வழிபட்டு உய்வுபெற எம்மை ஆற்றுப்படுத்துகின்றது. இப்பாடலைப் போன்று 107 கீர்த்தனைகளை உள்ளடக்கிய இந்நூல் வண்ணையம் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமான் மீது, 1972ம் ஆண்டு மஹா வித்துவான் யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ.என்.வீரமணிஐயர் அவர்களால் இயற்றப்பட்டு தேவஸ்தானத்தால் கொம்மேஷல் அச்சக ஸ்தாபனத்தாரின் அன்பளிப்பாக வெளியிடப்பட்டதாகும். இந்நூலின் பிரதிகள் தீர்ந்துவிட்ட காரணத்தால் இந்நூலின் பக்திச் சிறப்புக்கருதி மீண்டும் அடியார்கள் பெற்று பயன்பெறத்தக்க வகையில் இவ்வாலயத்தின் பிரதமகுரு பிரம்மஸ்ரீ.வ.இராஜேஸ்வரக் குருக்கள் அவர்கள் இதன் மறுபிரசுரமாகிய இரண்டாம் பதிப்பைத் தேவஸ்தானத்தின் சார்பில் வெளிக்கொணர்வதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ என்.வீரமணிஐயர் அவர்களையும், பிரம்மஸ்ரீ வ.இராஜேஸ்வரக் குருக்கள் அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் மனமுவந்து பாராட்டு வதோடு இந்நூலின் வழி எம்பெருமானின் அளவற்ற தெய்வீகப் பெருமை நாடெங்கணும் பரவி நன்மை சிறக்க வேண்டுமென வாழ்த்துகிறேன். 'நாராயணா' என்னும் நாமம் எமக்கு நலந்தரும் சொல்லாகும். ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமானின் தெய்வீகக்

குணநலன்களும் பெருமைகளும் அவனைப் பாராயணம் செய்வதினால் கிட்டும் பயன்களும் இந்நூலில் இடம்பெறும் பாடல்களில் நன்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ராக, தாள அமைப்புடன் கூடிய இக்கீர்த்தனைகள் பக்தியுணர்வுடன் பாடிப் பயனடையத்தக்கவை. மாயவன் அடியார்கள் இந்நூலை மனமுவந்து வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. கீர்த்தனை ஒவ்வொன்றும் பொருத்தமான தலைப்புடன் அமைக்கப்பட்டு உள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். திருமால் பெருமையை பக்தி நலத்தோடு இப்பாடல்கள் எடுத்தியம்புவதினால் நித்திய பாராயணத்திற்கேற்றவையாக மிளிர்கின்றன.

மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்கள் நாடறிந்த கவிமாமணியாவார். இறைபுகழ் பாடிப்பரவுவதையே தம் வாழ்நாளில் உயிர் மூச்சாகக் கொண்டு இயங்கி வருபவர். எமது பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் எழுந்தருளி அருள்பாலிக்கும் தெய்வங்கள் மீது கீர்த்தனைகள், அந்தாதி, திருவூஞ்சல் ஆகியவற்றைப் பாடி வருபவர். மயிலை கற்பகவல்லி மீது பாடிய பாடல்மூலம் தமிழகத்திலும் நன்கு அறிமுகமாகிய ஆற்றல்மிக கவிஞர். எமது நாட்டின் கவிதா விலாசத்தைத் தமிழகத்தில் உள்ளவர்களும் அறிந்து நயப்பதற்குக் காரணகர்த்தராக விளங்குபவர். அவரது கைவண்ணத்தில் உருவாகிய இக்கீர்த்தனை நூலை இரண்டாம் பதிப்பாக பிரம்மஸ்ரீ வ.இராஜேஸ்வரக் குருக்கள் வெளியிடுவது காலத்திற்கேற்ற ஒரு நல்ல முயற்சியாகும்.

இத்தகைய தெய்வீக கைங்கரியம் மேன்மேலும் தொடர் வதற்கும், அதன்வழி அனைவருக்கும் சாந்தியும், சுபீட்சமும் கிட்டுவதற்கும் திருவருள் பாலிக்கும் வண்ணம் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமானின் திவ்விய பாதக்கமலங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருநெல்வேலி.**

**பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்**
**கலைப்பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.**

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

# வாழ்த்துரை

இந்துமதத்திலே பன்னெடுங்காலமாகப் பேணப்பட்டு வருகின்ற திருக்கோவில் அமைப்பு, கிரியை நெறிகள், வழிபாட்டு முறைகள் என்பன தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வரும் மரபு சார்ந்தவை. ஆகவே அவற்றின் வளர்ச்சியைத் தொடர்ந்துவரும் சமூகத்திற்குக் கையளிக்கும் அதேவேளை அவற்றினை உணர்ந்து வரும் காலங்களிலே ஆவணப்படுத்தும் நிலையின் ஓர் வெளிப்பாடாகவே இக்கீர்த்தனை நூல் வெளிக்கொணரப் படுகின்றது.

திருக்கோவில் மரபுக்கு அடித்தளமாக விளங்குவன மூர்த்தி, தலம், தீர்த்தம். தோத்திரம், தியானம், அர்ச்சனை முதலியனவாகும். இவை புராணம் என்னும் மரபு நிலைக்குரியதாக அத்திருக்கோயிலைப் பற்றிய விபரங்களைத் தந்து நிற்கும் அந்நிலையில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஶ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் மீது எழுந்த கீர்த்தனைகளே இந்நூலாகும். இவ் ஆலயத்திற்கெனத் தனித்துவமான இலக்கியங்கள் உள்ளன. அவற்றுள் இயலிசை வாரிதி, மஹாவித்துவான் இணுவையூர் பிரம்மஶ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் அவர்கள் இயற்றி 1972ம் ஆண்டு முதற்பதிப்பாக வெளிவந்த 107 கீர்த்தனைகள் உள்ளடக்கிய இந்நூலானது பக்தர்கள் தினமும் போற்றித் துதித்துப் பாராயணம் செய்து பயன்பெறும் பொருட்டு இரண்டாவது மறுபதிப்பாக வெளிவருகின்றது.

எமது தேவஸ்தானத்திலே பயன்படுகின்ற முக்கிய பாடல்கள் அடங்கிய "ஸ்ரீ வெங்கடவன் பாமாலை" எனும் நூல் கடந்த 2001ம் ஆண்டு மார்கழி மாதம் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இத்தேவஸ்தானத்திற்குரிய ஸ்ரீ வெங்கடவன் புகழ்பாடும் இக் கீர்த்தனைகள் அடங்கிய நூல் வெளிவருகின்றது. இதனை ஆக்கி உபகரித்த பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயா அவர்களுக்கும், இந்நூலுருவாக்கத்திற்கு அயராது உழைத்த எமது தேவஸ்தான பிரதம குருக்கள் ஐயா அவர்களுக்கும், இதற்கான நிதியினை வழங்கிய அன்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் எல்லாம்வல்ல வெங்கடவரதனின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம். அடியார்கள் இந்நூலைப் பாராயணம் செய்து எம்பெருமான் திருவருட்கடாட்சம் பெற்று வாழ்வார்களாக.

***கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா கோவிந்தா***

**தலைவர் - ஆதீன மஹாசபை**
**ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

# நன்றியுரை

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கீர்த்தனைகள் எனும் இச்சிறு காணிக்கைத் தமிழிசை நூலை, ஸ்ரீமஹாலஷ்மி ஸமேத, வரதராஜப் பெருமாளின் பாதார விந்தங்களில் ஸமர்ப்பிக்கும் பாக்கியம் தந்த கண்ணனாம், மணிவண்ணனைத் திரிகரண சுத்தியுடன் நமஸ்கரிக்கின்றேன்.

1972ம் ஆண்டு வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர வரதராஜ பெருமாள் தேவஸ்தான வெளியீடாக, யாழ்ப்பாணம் கொம்மேஷல் அச்சக ஸ்தாபக அதிபர் அவர்களால் இந்நூல் வெளியிடப் பெற்றது. அன்னாருக்கும் எனது நன்றிகள்.

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ.வ.இராஜேஸ்வரக் குருக்கள் அவர்களால் இரண்டாவது பதிப்பாக இந்நூல் தேவஸ்தான வெளியீடாக வெளியிடப்பெறுகிறது. இந்நூலை அச்சேற்ற உதவிய சிவஸ்ரீ வ.இராஜேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும், அன்பர் களுக்கும், ஆசியுரைகள், அணிந்துரைகள் தந்த பெரியோர் களுக்கும் அழகாக இந்நூலை அச்சிட்டுத்தந்த சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது அன்பு கனிந்த நன்றிகள்.

இந்நூலை வெளியீடு செய்த வண்ணை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானப் பரிபாலன சபையினருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகள்.

**இணுவில்**
**சுன்னாகம்.**

**இங்ஙனம்**
**மஹாவித்துவான்**
**மா.த.ந.வீரமணிஐயர்**

உ

ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் துணை

## 01. வண்ணை வளரும் வெங்கடேசா அருள்

**ராகம் : ஸாரங்கா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வண்ணை வளரும் வெங்கடேசா - அருள்
வெண்ணை திருடிஉண்ட கண்ணனே ஸ்ரீநிவாசா

**அனுபல்லவி**

மண்ணை அள்ளி உண்டாய் மாயங்கள்தான் புரிந்தாய்!
பண்ணைப் பசுக்களிலே பாலூட்டி ஜாலம் செய்தாய்!

**சரணம்**

சங்கு சக்கரம் ஏந்தும் சாரங்கனே அருள்வாய்!
பொங்கும் பாற்கடல் தனில் பொலியும் பெருமாள் ஆனாய்!
எங்கணும் அருளின்பம் எழில் மிகும் திருவானாய்!
மங்கள நாயகி மகாலஷ்மி பதியானாய்!

## 02. அநந்தநாராயணா!

**ராகம் : கல்யாணி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மங்கள நாயகி மஹாலஷ்மி பதி நீயே!
சங்கு சக்கரதாரி சந்ததம் அருள்வாயே!

**அனுபல்லவி**

செங்கமலக் கல்யாணி சேரும் தயாநிதியே!
வெங்கடேசனே உந்தன் பங்ஜகப் பதங்கதியே!

**சரணம்**

அனந்த நாராயணா அருளமுதம் நீதா!
மனந்தனில் உறைந்திடும் மஹாலஷ்மியின் நாதா!
வனந்தனை மாலையணி வண்ணை வரதராஜா!
அனந்த சயனா அருள் அழகனே பெருமாளே!

## 03. நாராயணா என்று நவின்றிடுவாய்

**ராகம் : தோடி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நாராயணா என்று நவின்றிடுவாய் - கிளியே
ஆரா அமுதனைய அனந்த சயனன் ஹரி

**அனுபல்லவி**

பாராயணம் செய்யப் பாபவினை தீருமே!
தாராதலம் போற்றும் தாமோதரன் முர ஹரி

**சரணம்**

வரந்தரும் வண்ணை வரதராஜப் பெருமாள்
கரந்தனில் சங்குசக் கரமேந்தும் திருமால்
பரந்த நன்மனமுடையான் பரந்தாமன் வெங்கடேசன்
இரந்திடுவார்க் கருள் விரைந் தோடித் தந்திடுவான்.

## 04. கான கோபாலனைக் கண்டனையோ?

**ராகம் : பெஹாக்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

கான கோபாலனைக் கண்டனையோ? - பெண்ணே
மோனக் குழலிசைத்து மோஹந்தந்த வேணு

**அனுபல்லவி**

ஞானமுதல்வன் ஆயன் ஞானியரின் நேயன்
வானவர் ஏத்துபுகழ் வண்ணைப் பதிவாசன்

**சரணம்**

வண்ண மயிலிறகை வடிவுறச் சூடிடுவான்
வெண்ணை தயிர்திருட வீடு வீடாய் ஓடுவான்
பண்ணைப் பசுக்களிலே பாலூட்டும் வெங்கடேசன்
கண்ணையனாம் அந்தக் கட்டழகன் வரதராஜன்.

## 05. பாத மலர் தருவாய்

**ராகம் : காபி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

ஆதிசேடன் மீது அனந்த சயனம் கொள்ளும்
மேதினி நாயகனே பாதமலர் தருவாய்

**அனுபல்லவி**

பூதலத்தினில் வண்ணைப் புரம் வாழும் வெங்கடேசா
ஸ்ரீதரனே வரத ராஜப் பெருமாளே.

**சரணம்**

கருடவாஹனமேறி அனுமக் கொடியுமேந்தி
அருளதைத் தரவருவாய் அழகுச் சக்கரமேந்தி
இருளகற்றி ஒளியாம் அருள்தரும் ஆத்ம சாந்தி
திருவணங்காம் லஷ்மி திகழும் வதனகாந்தி.

## 06. அழகின் அழகன்

**ராகம் : தேஷ்** **தாளம் : ரூபகம்**

**பல்லவி**

அழகின் அழகன் நீயே - வண்ணை
எழில் வெங்கடேசா வரதராஜனே

**அனுபல்லவி**

குழலின் இசையில் கொஞ்சும் நாதம்
நிழலின் அருளை நல்கும் கீதம்

**சரணம்**

குயிலும் மயங்கிக் குரலும் தளரும்
மயிலும் தயங்கி தியங்கி மிரளும்
பயிலும் கிளியின் மொழியும் குளறும்
கயலும் மறந்து தரையில் புரளும்

## 07. திருமகள் மனோஹரா!

**ராகம் : ஸ்ரீ** **தாளம் : ஆதி**

**பல்லவி**

திருமகள் மனோஹரா தீன தயாபரா!
அருளதைத் தாராயோ ஆபத்பாந்தவா!

**அனுபல்லவி**

திருவளர் வண்ணையில் திகழும் வரதராஜா!
திருமாலே வெங்கடேசப் பெருமாளே அருளாயோ?

**சரணம்**

நந்தமுகுந்த அரவிந்தப் பதம் நீதா
சிந்தனைக் கினித்திடும் ஸ்ரீதரா பொற்பாதா
வந்தருள் புரியாயோ வண்ணை வரதராஜா
சுந்தர ரூபனே மந்தர கிரி தாரி.

## 08. கழலடியே சரணம்

**ராகம் : ஸஹானா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

அபயவரதங் காட்டி அருளதை நல்கிடும்
பதும நாபனே வண்ணை வரதராஜனே அருள்

**அனுபல்லவி**

உபயபதம் போற்றி உன்னையே பாடிடுவேன்
இதயமலர் இருத்தி எந்நாளும் பூஜை செய்வேன்

**சரணம்**

கருடவாஹன மேறிக் கனத்த சங்கும் தாங்கி
புருடசக்கரம் ஏந்தும் பெருமாளே வெங்கடேசா
தருணமிதுதானையா தண்ணருள் தாருமையா!
கருணை நிறைந்த கண்ணா கழலடியே சரணம்.

## 09. காந்தமாய் எனை இழுக்கும் கண்ணா!

**ராகம் : ஸிந்துபைரவி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

காந்தமாய் எனை இழுக்கும் கண்ணா - வண்ணை
பூந்தலத்தில் வளரும் பெருமாளே மணிவண்ணா

**அனுபல்லவி**

வேந்தன் திருமாலே வேங்கட வரதனே
சாந்தநாயகி லஷ்மி காந்தனே - காருண்யனே

**சரணம்**

மனம் உருகி உந்தன் மலரடி நாடுதே!
தினம் உனதிணையடி துணையெனப் பாடுதே!
அனவரதம் உனது அழகைக்கண் காணுதே!
கனவிலும் நனவிலுன் கவினுருத் தோணுதே!

## 10. வேணுகோபாலன்

**ராகம் : ஹம்ஸாநந்தி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

ஆயர் குலத்தினிலே மாயம் பல புரிந்தாய்!
சேயேன் எனக்குன்னருள் சொரிந்திடுவாய் கண்ணா!

**அனுபல்லவி**

வேயின் குழலிசைக்கும் வேணுகோபாலா லோலா!
தூய வண்ணை வரத ராஜனே நீ அருள்வாய்!

**சரணம்**

சுந்தரரூபமும் சுருள்சுரி சூடிடும்
அந்தநன் மயிற்பீலி அழகும் உருக்குதையா!
மந்திர மாமறையின் அந்தமும் ஆதிநீயே!
வந்திடுவாய் கண்ணா தந்தருள் வெங்கடேசா!

## 11. நீலமுகில் வண்ணா

**ராகம் : காம்போதி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நீலமுகில் வண்ணா அருள்வாய் - கண்ணா
பால கிருஷ்ணா முகுந்தா பரந்தாமனே சரணம்

**அனுபல்லவி**

சீலத்திருமகளைச் சேரும் வரதராஜா
மாலவனே முரளி மணிவண்ணனே அபயம்

**சரணம்**

செங்கையில் சங்கொடு சக்கரம் ஏந்தியே
மங்கை மஹாலஷ்மி மருவிட வண்ணையிலே
பொங்கும் அருள் பொழியும் வெங்கடேசா முகுந்தா!
எங்கும் இன்பமேபொலி மங்களம் நீ அருள்வாய்!

## 12. சாம்பவி சகோதரனே

**ராகம் : மாண்டு** **தாளம் : ஆதி**

**பல்லவி**

செந்தாமரைப் பதம் தருவாய் - திருமாலே
நிந்தாள் மலரடி நிலத்தில் சரணடைந்தேன்

**அனுபல்லவி**

நந்தா முகுந்தகோ விந்தா அரவிந்தா!
எந்தாயும் எந்தையும் எழிற்குரு தெய்வம் நீயே!

**சரணம்**

பாம்பணையில் பள்ளிகொள்ளும் பரந்தாமா - வெங்கடேசா
ஆம்பலனைய நயனா அநந்த நாராயணா!
நாம்பரவித் துதித்திடும் நற்பதி வண்ணையிலே
ஸாம்பவி ஸகோதரனே சரணம் வரதராஜா.

## 13. வினை தீர்க்கும் மாதவனே!

**ராகம் : தோடி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

பாற்கடலில் பள்ளிகொள்ளும் பத்மநாபனே அருள்வாய்!
நாற்றிசையும் போற்றவருள் நாராயணா தந்தருள்வாய்!

**அனுபல்லவி**

போற்றி செய்யும் வண்ணையிலே பூமாதேவியோடமர்ந்தே
வீற்றிருந்தே அருள்செய்யும் வெங்கடேசப் பெருமாளே!

**சரணம்**

வண்ணை வரதராஜனே வேங்கட கிரிவாசனே!
மண்ணையுண்டு மாயம் செய்த மஹாவிஷ்ணு நாரணனே!
கண்ணையனே கோகுலனே கானவேணு கோபாலனே!
விண்ணையனே ஸ்ரீதரனே வினை தீர்க்கும் மாதவனே!

## 14. சக்கரதாரி

**ராகம் : ஷண்முகப்பிரியா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வெங்கடரமணா பங்கஜவதனா
சங்குசக்கரதாரி சரணம் அருள்முராரி

**அனுபல்லவி**

செங்கமலச் செல்வி செந்திரு மருவிடும்
மங்களனே வரத ராஜனே வண்ணை வளர்

**சரணம்**

அம்புஜப் பதமலர் அவனியில் துணையே!
உம்பர் தொழுதேத்தும் உரகச னாஹரி
கும்பிடு வார்துயர் குறைதீர்க்கும் வெங்கடேசா
அம்பிகை சோதரனே அநந்த நாராயணா!

## 15. மாயம்புரியும் கண்ணனே!

**ராகம் : ஸரஸ்வதி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மாயம் புரியும் கண்ணனே - இந்த
ஆயர் குலம் மயக்கி வேயின் குழலிசைத்து

**அனுபல்லவி**

தூயமயிலின் நீலத் தோகைப் பீலிசூடுவாய்!
தூதுஐவர் மகிழ ஏகிந டந்திடுவாய்

**சரணம்**

கீதை அருச்சுனர்க்குப் போதனை செய்திடுவாய்!
கோதை பாஞ்சாலி அன்று கூவ அருள்புரிந்தாய்!
ராதை மகிழ நீ பிருந் தாவனத்தில் பாடினாய்!
போதைக் குழலிசைய சோதை மனங்குளிர!

வெண்ணை திருடியுண்ட வேணு கோபாலனே
வண்ணை வரதராஜ வேங்கடப் பெருமானே
எண்ணமெல்லாம் நீயே எங்கும் நிறைந்தாயே!
கண்ணனே மஹாலஷ்மி கணவனே யருள்வாயே!

## 16. கள்ளக் குறு நடைக்காட்சி

**ராகம் : பாகேஸ்ரீ** **தாளம் : ஆதி**

**பல்லவி**

துள்ளிமனம் குதிக்குதே - கண்ணா
அள்ளி அணைத்துனக்கு ஆசை முத்தங்கள் சூட்ட

**அனுபல்லவி**

வெள்ளிச் சதங்கை கொஞ்ச விளையாடி மண்ணளையும்
கள்ளக்குறு நடையிற் காட்சியதனைக் கண்டால்

சரணம்

கஞ்சவிழிக்கடையில் காட்டுவாய் நீகுறும்பு
நெஞ்சில் நிறைந்திடும் நின்அழகு விஷமம்
பிஞ்சுக் குழந்தையென்று பிரியமாய் முத்தமிட்டால்
வஞ்சக் குறும்புடனே வாயால் கடிப்பாய் என்னை.

சந்தான கோபாலா சங்கு சக்கரதாரி
மாந்தாரை மலர்மலி வண்ணைப் பதியினிலே
செந்தாமரைச் செல்வி சேரும் வெங்கடேசா
வந்தாளும் ஸ்ரீதரா வரதராஜப் பெருமாள்.

## 17. திக்கு வேறில்லை ஐயா

ராகம் : கானடா தாளம் : ஆதி

பல்லவி

திக்கு வேறில்லை ஐயா - திருமாலே
நெக்கு நெக்குருகியுன் நிழலடி நாடினேன்

அனுபல்லவி

மிக்க புகழோங்கும் மிளிர் வண்ணைப் பதியினிலே
பக்கம் செந்திருவுடன் பள்ளியிலே காட்சியருள்

சரணம்

உந்திக் கமலமதில் உயர்வேதனை அமர்த்தி
புந்திம கிழ்ந்துலஷ்மி புனிதாவுன் கழல்வருட
நிந்திருவடியருள் நிமலனே வெங்கடேசா!
வந்திருந்தருள் தாரும் வரதராஜப் பெருமாள்.

## 18. உன்னழகை நான் நினைக்க ....

ராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி

உன்னழகை நான் நினைக்க உள்ளமெல்லாம் சிலிர்க்குதையா
வன்ன வடிவழகா வண்ணைவ ரதராஜா

அனுபல்லவி

கன்னல் மொழியழகும் கமல விழியழகும்
சென்னி முடியழகும் செல்விசேரும் வண்ணையிலே

சரணம்

அங்கையில் ஏந்திடும் சங்குசக்கரத் தழகும்
பங்கஜப் பதவழகும் பாற்கடல் அலையழகும்
பொங்கரா வின்அழகும் பொலிசயன வழகும்
மங்கள லஷ்மியொடு மருவிடும் வெங்கடேசா.

## 19. ஆதரவருள்வாய்

**ராகம் : பூபாளம்** **தாளம் : ஆதி**

பல்லவி

ஆதரவருள்வாய் ஐயா - அநந்தராமா
பூதலத்தில் வண்ணை வந்தே புகலிடமா யடைந்தேன்

அனுபல்லவி

மாதவனே ஸ்ரீ தரா மாலே மணிவண்ணா!
சீதப்பொற் பதமருள் செந்திரு நாயகனே

சரணம்

வெங்கடேசா அருள் விரிகமல நயனா!
சங்க சக்கரதாரி மந்தர கிரதாரி!
பொங்கும் பாற்கடல் வளர் பெருமானே வரதராஜா!
மங்களம் நீ அருள்வாய் மஹாலஷ்மி பதிஹரி!

## 20. சந்தான கோபாலன்

**ராகம் : பிருந்தாவனஸாரங்கா** **தாளம் : ஆதி**

பல்லவி

மண்ணையும் விண்ணையும் மறப்பேனடா! - மலர்க்
கண்ணையனே உன்னைக் காணும்போது இந்த

**அனுபல்லவி**

வண்ணைப்பதி தவழும் வரதராஜனே நீயும்
பண்ணைப் பசுக்களிலே பாலூட்டும் லீலை கண்டால்

**சரணம்**

தவழ்ந்து தவழ்ந்து வந்தே தயிர்ப்பானைக் கேஉதைப்பாய்
கவிழ்ந்து விழுந்த தயிர்க் கட்டிகளைச் சுவைப்பாய்
குழந்தை அல்லவோ என்று குனிந்தெடுத்தே யணைத்தால்
செழுந்திரு வாயால் கன்னம் சிவக்க முத்தம் தருவாய்

சந்தான கோபாலா சந்ததம் என்னுளத்தில்
நந்தா விளக்கெனவே நாளும் ஒளிதருவாய்!
பிருந்தாவன முரளி அரங்கனே வெங்கடேசா
செந்தாமரைப் பதம் தந்தாளும் முகுந்தனே.

## 21. வாராயோ கண்ணா?

**ராகம் : தேஷ்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வாராயோ கண்ணா? - என்னைப்
பாராயோ மணி வண்ணா?

**அனுபல்லவி**

தாராயோ இன்பம் தண்ணிசைக் குழலூதித்
தீராயோ துன்பம் தெய்வம் நீயன்றோ?

**சரணம்**

வண்ணை வரதராஜா வந்தின்பம் தாராயோ?
கண்ணையனே எந்தன் கவலைகள் தீராயோ?
வெண்ணை களவெடுக்கும் வேங்குழல் ஆயனே
மண்ணை விண்ணாக்கிய மா வெங்க டேசனே.

## 22. பார்த்தசாரதி

**ராகம் : பரசு** **தாளம் : ஆதி**

**பல்லவி**

கீதை உபதேசித்த கண்ணா - அருள்
ராதை மகிழும் மணிவண்ணா அர்ஜுனர்க்கு

**அனுபல்லவி**

பாதை காட்டியே அன்று பார்த்தசா ரதியாகி
வேதவழிகாட்டி வாழவைத் தாய் உலகில்

**சரணம்**

கண்ணைத் திறந்தருள்வாய் வரதராஜா அருள்
வண்ணைப்பதியமரும் வனமாலி வெங்கடேசா
விண்ணைப் பழிக்கும் நீல வண்ணஹரி கோவிந்தா
என்னைக்கண் பாராயோ எழில்மலர் பதமுகுந்தா?

## 23. நளினப்பதம் துணையே

**ராகம் : கரஹரப்பிரியா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மாடோட்டித் திரிந்திடும் மாயவனே! - காண்டீபன்
தேரோட்டியானவனே தீனதயாபரனே!

**அனுபல்லவி**

வீடோடித் திரிந்துமே வெண்ணை களவெடுக்கும்
நாடோடி நாரணனே நளினப் பதம் துணையே!

**சரணம்**

குழலூதிக் கோபியரைக் கொள்ளைகொள் வெங்கடேசா
அழகான மயிற்பீலி அணிவேணி ரங்கநாதா!
எழில்மேவும் வண்ணையிலே வளரும் வரதராஜா
கழலே சரணடைந்தேன் கருணை புரிந்தருள்வாய்.

## 24. காளிங்க நர்த்தனா

**ராகம் : ஹமீர்கல்யாணி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

அரவமீது நடனம் ஆடிய கண்ணா!
கரமலர் தூக்கியருள் காளிங்க நர்த்தனா!

**அனுபல்லவி**

உரசயனாஹரி உயர் வண்ணைப்பதியிலே
வரதராஜனாய் வளர் பரமத யாநிதியே!

**சரணம்**

பாதச் சதங்கைகொஞ்சப் பாம்புத் தலைமீதில்
நாதக்குழலிசைத்தே நர்த்தனம் செய்த கண்ணா!
பூதல வெங்கடேசா பூம்பதத் தாமரையை
காதலி தயத்திலே களித்து நடம்புரிவாய்.

## 25. ஆவணி ரோஹிணியில் அவதரித்த கண்ணா

**ராகம் : காபி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

ஆவணி ரோஹிணியில் அவதரித்த கண்ணா!
நாவணி வேய்ங்குழலின் நாதத்தில் மெய்மறந்தேன்

**அனுபல்லவி**

பூவணிப் பதந்தாராய் புரவண்ணை வெங்கடேசா
மாமணி வண்ணாஹரி வரதராஜனே அருள்

**சரணம்**

பூதகி உயிர்குடித்துப் புவியினைக் காத்தனை!
மோதவந்த சகடம் முறித்துடைத் தழித்தனை!
மாதவளாம் யசோதை மனமகிழ வந்தனை!
ஸ்ரீதரனே முரளி கானக் கோபாலனே!

## 26. ஆதாரம் உந்தன் அம்புஜப் பதமே

**ராகம் : காமாஸ்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

திருப்பாற்கடலில் திகழும் திருஹரி
அருட்பாதமலர் அவனியில் அருளே

**அனுபல்லவி**

விருப்பால் வண்ணை வெங்கடவாதா
திருப்பாடல் பாட திருவருள் புரிவாய்!

**சரணம்**

மாதாம ஹாலஷ்மி மகிழ்ந்தணைத் திடுவோய்!
ஆதாரம் உந்தன் அம்புஜப் பதமே!
போதானந்தப் பொருளே முரஹரி முகுந்தா!
பேரானந்தம் அருள் வரதராஜப் பெருமாள்.

## 27. என்ன குறையுமில்லை

**ராகம் : சங்கராபரணம்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வண்ணை வெங்கடேச வரதராஜன் இருக்க
மண்ணுலகில் உனக்கு என்ன குறையுமில்லை!

**அனுபல்லவி**

பண்ணைப் பசுக்களையும் மண்ணுலக மக்களையும்
கண்ணன் கோவர்த்தனம் காத்த கரமிருக்க மனமே

**சரணம்**

அழுவார்க் கிரங்கிடுவான் அனந்த நாராயணன்
தொழுவார்க் கருள்செய்வான் தூயவேணு கானன்
விழுவார் பதந்துதிக்க விளங்கிடக் கருணைதரும்
குழலாயன் வெங்கடேச வரதராஜப் பெருமான்.

## 28. அவனின்றி ஓரணு அசைந்திடுமோ?

ராகம் : வாசஸ்பதி தாளம் : ஆதி

பல்லவி

பாராயணம் பண்ணுவாய் - ஸ்ரீ முகுந்த
நாராயணா என்று நாளும் பக்தி செய்து

அனுபல்லவி

பேராயிரம் உடையான் பெருமாள் கோவிந்தன்
சீரான வண்ணையிலே கோவில்கொண்ட வரதன்

சரணம்

அரங்கநாதன் அநந்தன் அம்புஜ லோசனன்
இரங்கிடுவான் வரம் இறைஞ்சிடுவான் நந்தன்
வரங்கள்தரும் வேங்கட வரதராஜப் பெருமாள்
புரந்தனில் இணையிலா புகழ்வண்ணை ஸ்ரீ ஹரியை.

## 29. நமோ நாராயணாய

ராகம் : ஹம்சநாதம் தாளம் : ஆதி

பல்லவி

நாராயணா நமோஸ்துதே - நமோ
ஆரா அமுதமே அச்சுதனே அநந்த

அனுபல்லவி

தாராயோ நின்னருளை ஆயர் குலத்துதித்த
காயம்பூ மேனி வண்ணா கண்ணா கோவிந்தஹரி!

சரணம்

பாம்பணைமேல் பள்ளிகொண்ட
பத்மநாபனே சரணம்
சாம்பவியின் சோதரனே
சங்குசக்கர தாரணனே
பூம்பதியாம் வண்ணையிலே
பொலியும் வெங்கடேசனே
ஆம்பலனைய நயனா
அரங்கா வரதராஜா

## 30. நாராயணா எனும் மந்த்ரம்

**ராகம் : கல்யாணி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நாராயணா எனும் மந்த்ரம் - மனமே
நாளும் ஜெபிப்பாய் திவ்ய மோக்ஷம் நிரந்தரம்

**அனுபல்லவி**

வாராது தீவினைகள் வரதராஜன் அருளால்
பாராயணம் என்றும் பக்தியுடன் புரிவாய்

**சரணம்**

ஸ்ரீதரன் மாதவன் சிறந்த அருள் தருவான்
பதமலர்தனைப் பக்தியுடன் துதிப்பாய்
பூதலந்தனில் வண்ணைப் பதி வேங்க டேஸ்வரன்
மாதவன் மாலவன் மாயவன் திருநாமம்.

## 31. முரஹரி முகுந்தன்

**ராகம் : ஹேமவதி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

அரிநாராயணா அருள் தருவாய்
திரிபுரஸுந்தரி சோதரனே வண்ணை

**அனுபல்லவி**

கிரிதரனே முராரே கிருஷ்ணா எனைக்காப்பாய்!
முரஹரி முகுந்தனே மூவுலக நாயகனே!

**சரணம்**

ஆதிசேடன்மீது அமர்ந்து பள்ளிகொண்டு
மாதிருச் செந்திருவும் பாத சேவை செய்ய
வேதமுதல்வனாய் விளங்கும் வெங்கடேசா!
ஆதரவருள் வரத ராஜப் பெருமாளே.

## 32. உள்ளமிரங்கவில்லையா?

**ராகம் : ஸாவேரி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

உள்ளமிரங்க வில்லையா? - வெங்கடேசா
தெள்ளத் தெளிந்த மனத் துள்ள குறைகள் கண்டும்

**அனுபல்லவி**

அள்ளக் குறைந்திடாத ஆனந்த வெள்ளமே
கள்ள வெண் ணைதிருடும் கண்ணனே இன்னமும்

**சரணம்**

செந்திருத்தேவிமார் சுந்தர நாயகா
வந்தருள்வாய் வண்ணை வரதராஜப் பெருமான்
சிந்தைகுளிர்ந்திட ஸ்ரீதரனே முகுந்தா!
புந்திமகிழ்ந்தருள் புரிவாய் கோபாலா!

## 33. கண்ணா உன் மனம் கல்லா?

**ராகம் : கௌரிமனோஹரி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

கண்ணா உன் மனம் கல்லா? - மணி
வண்ணா வண்ணைப்பதி வரதராஜனே ஹரி

**அனுபல்லவி**

பண்ணார் தமிழிற் பாட பரிந்தருள் செய்யும் தேவா!
விண்ணோர்கள் ஏத்து மஹா விஷ்ணுவே நீ அருள்வாய்!

**சரணம்**

சங்கொடுசக்கரம் தாங்கும் வெங்கடேசா!
மங்கள ஸ்ரீ லஷ்மி மணவாளா ஸ்ரீ நிவாசா!
பொங்கஆதி சேடன் புனிதசயனா நேயா
பங்கஜக் கண்ணனே மங்களம் நீ அருள்வாய்!

## 34. கருணாநிதி நீயே கண்ணா!

**ராகம் : ஹிந்தோளம்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

கருணாநிதியே கண்ணா! - அபயம்
தருவாய் மணிவண்ணா திருமால் மணிவண்ணா!

**அனுபல்லவி**

திருவாழும் வண்ணையிலே திகழும் வெங்கடேசா!
பெருமாளே நின்தரு பதமாமலர் தருவாய்!

**சரணம்**

வரதராஜனே என்றும் வரமருள் முகுந்தனே!
கரதலத்தில் சங்கு கமழ் சக்கரம் கொண்டோய்!
பிரகலா தனுக்கருள் பிரியமுடன் செய்தாய்!
அரவணை துயிலுமால் அரி அனந்த சயனா!

## 35. துளசியணியும் தூயன்

**ராகம் : வலஜி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

ஆயர் குலத்து தீபனே - துளசியமணி
தூயவேய்ங் குழலிசை வாயனே நீ அருள்வாய்

**அனுபல்லவி**

மாயவனே கண்ணா மதுசூதனா வண்ணை
ஆயனே வெங்கடேசா அபயமருள் கோவிந்தா!

**சரணம்**

செல்வி மஹாலஷ்மீ சேர்ந்திடும் ஸ்ரீநிவாசா!
வல்லவனே வரதராஜப் பெருமானே!
நல்விதமாய் அருளும் நாயகனே முரளி!
அல்லும் பகலும் உந்தன் அடிநினைந்துருகினேன்.

## 36. சுந்தரரூபன்

**ராகம் : ஷண்முகப்ரியா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

சுந்தரூபனே வெங்கடேஸ்வரா! - நிதம்
எந்தன் இதயத்திலே என்றும் நடம் புரிந்தாய்!

**அனுபல்லவி**

செந்தமிழ் வண்ணையிலே செந்திருவும் மகிழ
வந்திருந்தருள் செய்யும் வரதராஜனே அருள்

**சரணம்**

ஆயிரம் நாமம் சொல்லி அடியிணை பரவியே
பாயிரம் பாடியே நின் பக்திநான் செய்யவருள்
தூயவனே வண்ணை வாச வெங்கடேசா
மாயவனே வரத ராஜப் பெருமாளே.

## 37. நந்தகோபாலனுக்குச் சிங்காரம்

**ராகம் : பாகேஸ்வரி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நந்தகோபாலனுக்குச் சிங்காரம் செய்தகதை
அந்தரங்கமாய் சொல்வேன் ஆருயிர் தோழியே.

**அனுபல்லவி**

சுந்தரமுகம் திருத்திச் சுரிக்குழல் வாரிவிட்டு
சந்தனச் சாந்துமிட்டுச் சிந்தூரப் பொட்டுமிட்டு

**சரணம்**

கஞ்சமலர் விழியில் அஞ்சனமை தீட்டி
பிஞ்சும யிலிறகை செஞ்சடை யில் சூட்டி
நெஞ்சமதிலே கண்ணன் மிஞ்சும் அழகு கண்டேன்
வஞ்சியெனை யணைத்து வாயில் முத்த மிட்டானடி!

வெண்ணை உண்ண நானும் விரும்பியூட்ட வாயில்
மண்ணை அள்ளி உண்டு மாயம் செய்தானடி
விண்ணையெல்லாம் காட்டும் வெங்கட ரமணன்
வண்ணைப்பதி வரத ராஜ முர ளீதரன்.

## 38. வேய்ங்குழல் ஊதிடும் வெங்கடேசன்

**ராகம் : பெஹாக்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மாயக் குழலிசைத்து மயக்குகிறான் - கண்ணன்
ஆயர்பாடிதனிலே ஆநிரையின் நடுவே

**அனுபல்லவி**

வாயதில் வெண்ணை கமழ் வாசனை வீசிடவே
மாயவன் சராசர ஜீவ கோடிகளையே

**சரணம்**

வேய்ங்குழலூதிடும் வெங்கடேசன் கானம்
மாங்குயில் கூவிடாமல் மயங்கிடும் இசைமோனம்
பாங்குடனே வண்ணை வரதராஜப் பெருமாள்
தீங்குழ லிசைகேட்டு திசையெலாம் நெக்குருகும்

## 39. செந்துரு நாயகன்

**ராகம் : ஹிந்தோளம்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நவரத்னக்ரீடமணி நாராயணா - வண்ணை
பதிசக்ரசங்கமேந்தும் பரந்தாமா அருள்வாய்

**அனுபல்லவி**

புவியனைத்தும் அளந்த புகழ்வாமனன் கண்ணன்
கவிதைத்தமிழ் தருவான் ஹரிஸ்ரீ வெங்கடேசன்

சரணம்

செந்திருநாயகன் செங்கமலப் பாதன்
வந்தருள் செய்திடுவான் வண்ணை வரதராஜன்
புந்திக்கமலநாதன் புராரி நந்தமுகுந்தன்
அந்திமே கவண்ணன் அநந்தசயனா அருள்.

## 40. தீனதயாபரன்

**ராகம் : அமிர்தவர்ஷணி** **தாளம் : ஆதி**

பல்லவி

அருள்மழை பொழிகிறான் ஐயன் - வண்ணைப்
பெருமாள் வெங்கடேசன் பெருவரம் நல்கிடுவான்

அனுபல்லவி

வருமிடர் நீக்கிடுவான் வரதராஜன் கோவிந்தன்
திருமகள் தழுவிடும் தீனத யாபரன்

சரணம்

கருணை மழைபொழியும் கண்ணன் மணிவண்ணன்
திருமால் பரந்தாமன் துணைபுரிவான் நந்தன்
அருமறை போற்றிடும் அநந்தசயனன் மாயன்
திருவருள் புரிந்தென்றும் முறுவல்சொரிந் தென்னாளும்.

## 41. மத்ஸாவதாரமாயன்

**ராகம் : கீரவாணி** **தாளம் : ஆதி**

பல்லவி

மத்ஸாவதார மாயவனே - கண்ணா!
வத்ஸலா தேவியின் நாயகனே அருள்வாய்

அனுபல்லவி

இச்சாகிரியாஞான சக்தியின் உருவமே
நற்சாகரத்தில்அமர் ஸர்ப்பாசனமூர்த்தியே

சரணம்

வரந்தருவாய் வண்ணை வரதராஜனே உன்னை
பரந்தஉன் பக்திக்கானம் பாரினில் பாடஅருள்
கரந்தனில் சங்குசக் கரமேந்தும் வெங்கடேசா!
புரந்தனில் அழகிய புரிவண்ணை வாசனே!

## 42. ஆதிமூலம்

**ராகம் : ஹம்ஸாநந்தி** **தாளம் : ஆதி**

பல்லவி

அபயம் என்றவருக்கு அஞ்சல் அருளும் உந்தன்
உபயபதம் தருவாய் உயர்வண்ணை வெங்கடேசா!

அனுபல்லவி

இதயமதில் எழிலாய் நடஞ்செய்யும் நாராயணா!
உதயகோடி சூர்ய ஒளிப் பிரகாச வதனா!

சரணம்

ஆதிமூலமே என்று அலறிய கஜேந்திரன்
நாதியாகவந்து நல்லருள் புரிந்தனை!
மேதினியில் வண்ணை மேவும் வரதராஜா!
ஊதிடும் சங்கொடு சக்கரதாரி ஹரி!

## 43. மீனுருவானவனே!

**ராகம் : ஸரஸ்வதி** **தாளம் : ஆதி**

பல்லவி

மீனுருவானவனே வேணுகோபாலனே!
பானுமதி போற்றும் பரந்தாமனே நீ அருள்வாய்

அனுபல்லவி

வானவர் ஏத்துபுகழ் வண்ணைப் பதியினிலே
தானவதி லஷ்மி தழுவும் வெங்கடேசா

சரணம்

கரதலந் தன்னிலே கனத்த பாஞ்சஜன்யம்
மரகதச் சக்கரமும் வரதஅப யமேந்தும்
வரதராஜப் பெருமாள் வாழ்வினில் நீயேகதி
சிரமதில் நவரத்ன சிந்தாமணிக் கண்ணா!

## 44. மங்கள நாயகன்

**ராகம் : கரஹரப்பிரியா** **தாளம் : ஆதி**

பல்லவி

காத்திடுவான் கமலக் கண்ணன் - வண்ணை
மாத்திருப்பதி தனில் வளரும் வெங்கடேசன்

அனுபல்லவி

பூத்திருக்கும் நாபிப் பூமலரில் வேதன்
வீற்றிருக்க அருளும் வரதராஜப் பெருமாள்.

சரணம்

மங்கைம ஹாலஷ்மி மருவிடும் ஸ்ரீகாந்தன்
சங்குசக்கரதாரி சஞ்சலம் தீர்த்தருள்வான்
பங்கஜலோசனன் பரந்தாமன் கோவிந்தன்
மங்கள நாயகன் மலரடிகள் அருள்வான்

## 45. வேயின் குழலிசைக்கும் வேணு கோபாலன்

**ராகம் : ஷண்முகப்பிரியா** **தாளம் : ஆதி**

பல்லவி

ஷண்முகனின் அருமை மாமன் - கண்ணன்
என்முகம் பார்த்தருள் ஆயன் மாயன் நேயன்

அனுபல்லவி

கண்வழி நீர்சொரியக் கசிந்து மனம்உருக
மண்ணிலத்தில் அருளும் மாதவன் யாதவன்

சரணம்

தூய வண்ணை வளரும் மாதவன் வெங்கடேசன்
தாயவள் மஹாலஷ்மி தழுவிடும் ஸ்ரீதரன்
வேயின் குழலிசைக்கும் வேணுகான கோபாலன்
காயாம்பூ மேனி வண்ணன் கந்தனுக்கருள்பவன்.

## 46. கூர்மாவதாரன்

**ராகம் : பூபாளம்** **தாளம் : ஆதி**

பல்லவி

கூர்மாவதாரா கோவிந்தா - வண்ணைச்
சீர்மேவும் பதியினில் வாழும் வரதராஜா

அனுபல்லவி

கார்மேக வண்ணா கண்ணா மணிவண்ணா!
பார்போற்றும் வெங்கடேசா பரந்தாமா அரவிந்தா!

சரணம்

மந்தரம் மத்தாக வாசுகி நாணாக
இந்திரர் தேவரொடு இராக்கதர் பாற்கடலை
தந்திரமாய்க்கடைய தானொரு கூர்மமாகி
செந்திரு நாயகா செழுங்கருணை புரிந்தாய்!

## 47. ஆமையுருவான அச்சுதனே

**ராகம் : கல்யாணி** **தாளம் : ஆதி**

பல்லவி

ஆமையுருவான அச்சுதனே - அபயம்
மாமலை சுமந்த கண்ணா மலரடிகள் துணையே!

அனுபல்லவி

பூமகள் பதம்வருடப் பூத்திருப்பாற்கடலில்
பாமகள் பதம் படிக்கப் பரவசம் கொள்பவனே!

**சரணம்**

மகரகுண் டலங்களும் மரகதப்பொன்முடியும்
புகலரும் புகழ்மிகும் புரிசங்க சக்கரமும்
கமலவிழிகள் அருள் காந்தமெனச் சொரியும்
வரதராஜனே தல வண்ணை வளரும் தேவா!

## 48. நீலமணிக்கண்ணா!

**ராகம் : ஆரபி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நீலமணிக்கண்ணா உந்தன் பாதமலர் நீ அருள்வாய்
கோலமணிக்ரீடம் மின்ன கோவில் கொண்ட வண்ணை நாதா

**அனுபல்லவி**

பாலகிருஷ்ணனே முகுந்தா பரந்தாமாஎன யானை
ஓலமிட்டழுகை கேட்டே ஓடோடி வந்த சீலா!

**சரணம்**

சரணம் சரணம் என்றே சந்ததமும் என் கதறல்
மகரகுண்டலச் செவியில் ஒருமுறை ஒலிக்காதோ?
வரமருளி என்னை வரதராஜனே காப்பாய்!
புரவண்ணை வெங்கடேசா புனித அரங்கநாதா!

## 49. அச்சுதனே அநந்த நாராயணா!

**ராகம் : காம்போதி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

அச்சுதனே அநந்த நாராயணா! - அபயம்
இச்செகத் தினில்வண்ணை அமர்ந்த முகுந் தாஅருள்

**அனுபல்லவி**

மெச்சும்கூர்மமுமாகி மந்தரம் சுமந்தனையே!
அச்சம் அகற்றியருள் அரங்கநா தாகோவிந்தா!

சரணம்

அபலை எனக்கருளும் ஆதிசேடவா ஹனா!
தபசிகள் தொழுதேத்தும் தாமோத ராமதனா!
துளசிமாலையணியும் தூய வெங்கடேசா!
வளமலி வண்ணைநகர் வரதராஜனே அருள்!

## 50. மாயாவதாரன்

**ராகம் : பாகேஶ்ரீ** **தாளம் : ஆதி**

பல்லவி

நின்னருள் தாருமையா - நந்தா
வண்ணக் குழலிசைக்கும் வண்ணை வரதராஜா

அனுபல்லவி

பன்னகவாஹனா பார்வதி சோதரா!
இன்னமும் தாமதம் ஏனோ அரங்கநாதா?

சரணம்

மாயாவதாரா மஹாவிஷ்ணு மூர்த்தியே!
வாயாரப் பாடஅருள் வளமார் உன்கீர்த்தியே!
தாயான தத்துவனே தயாபர வெங்கடேசா!
காயாம் பூவண்ணனே கழலடி நீ அருள்வாய்.

## 51. அம்புஜப்பதமருள்வாய்

**ராகம் : ஆபேரி** **தாளம் : ஆதி**

பல்லவி

வரமருள்வாய் வண்ணை வரதராஜனே - ஸ்ரீதரா
அரவிந்த லோசனா அம்புஜம் பதமருள்வாய்

அனுபல்லவி

சரமழையெனக்கவி சொரிந்துனைப்பாடவே!
சரணமலர் பிடித்தேன் சந்ததம் போற்றிடவே!

**சரணம்**

அரவணைமேல் துயிலும் அநந்தசயனா கண்ணா!
முரஹரி கோவிந்த முகுந்தவைகுந்த வாசா!
கரமலர்ச்சங்கொடு சக்கரம் தாங்கும் மாயா!
சிரமதில் நவரத்ன முடிதுலங்கும் அழகா!

## 52. வராகாவதாரா

**ராகம் : காமவர்த்தனி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வராகாவதாரா வந்தாள்வாய் வண்ணை
முரஹரி முகுந்தனே முக்கண்ணன் மைத்துனனே

**அனுபல்லவி**

அராவணைதுயிலும் ஆதிசேஷ வா ஹனா!
பராமுகம் ஏனையா பரந்தாமா வெங்கடேசா!

**சரணம்**

வெங்கடவரதனே விஷ்ணுவரதராஜா!
மங்களநாயகி மஹாலஷ்மி நாயகா!
சங்கசக்கரதாரி சரணமருள் கோவிந்தா!
பங்கஜநாபனே பரிந்தருள்வாய் கண்ணா!

## 53. மஹாலஷ்மி நாராயணா

**ராகம் : தோடி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மஹாலஷ்மி நாராயணா - உந்தன்
மலரடி சரணம் மகிழ்ந்தருள் தருவாய்!

**அனுபல்லவி**

மஹாவிஷ்ணு மூர்த்தியே - அபயம்
மருவும் வண்ணை நகர் வரதராஜா அருள்

சரணம்

அபயம் அபயம் என்று ஆனை கதற அன்று
உபய பதம் கொடுத்து உவந்தனை நல்வரம்!
பவவினை தீராயோ பரந்தாமா வெங்கடேசா?
நவரத்ன மணிமார்ப நளினி மனோஹரா!

## 54. குழலோடு விளையாடும் ஹரிகேசவா

**ராகம் : தேஷ்** **தாளம் : ஆதி**

பல்லவி

அழகான மயிற்பீலி அடைந்தாடவா!
குழலோடு விளையாடும் ஹரிகேசவா!

அனுபல்லவி

கழல்மேவும் கிண்கிணி மணியாடவா!
எழில்மேவும் பொன்முடி ஒளிவீசவா!

சரணம்

பொழில் சூழும் வளவண்ணை வளர் வெங்கடேசா!
விழியாட விசும்பாட விளையாட நீ வா!
மொழியாடும் மஹாலஷ்மிக் கிளியோடு வா
வழிகாட்டும் வரந்தாரும் வரதராஜா கண்ணா!

## 55. ஏனோ இந்த மௌனம்?

**ராகம் : நாதநாமக்கிரியா** **தாளம் : ஆதி**

பல்லவி

ஏனோ இந்த மௌனம்? - எம்பெருமானே
வானோர் துதிசெய்யும் வண்ணை வரதராஜா

அனுபல்லவி

மானேரும் விழிமங்கை மஹாலஷ்மி மருவிடும்
ஞானேந்தி ரமாயா ஜாலக்கண்ணா என்மேல்

சரணம்

வண்ணை வளர்ந்திடும் வெங்கடேசா அருள்வாய்!
வெண்ணை தயிர் உண்ட கண்ணையனே சரணம்
மண்ணையள்ளி உண்டு மாயம் புரிந்த கண்ணா!
விண்ணைக் கவர் அழகா வெங்கடகிரி நாதா

## 56. வேடிக்கைதனைப் பாரடி

**ராகம் : ரஞ்ஜனி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வேடிக்கை தனைப் பாரடி - கோதை
சூடிக்கொடுத்த மலர் மாலை யணிந்த கண்ணன்

**அனுபல்லவி**

நாடிக்கையிலே வேணு கானக் குழலிசைத்து
பாடி எமைமயக்கி ஓடிடும் வரதராஜன்

**சரணம்**

மானினம் ஆனினம் மேயலை மறக்கும்
பாலினை ஊட்டிய பசுக்கன்றும் மயங்கும்
தேனினை எடுத்துண்ணத் தும்பிமறந்திடும்
ஸ்ரீநிவாசன் வண்ணை வெங்கடேசன் செய்யும்

## 57. ஜீவாத்மாவுடன் கலந்த பரமாத்மா

**ராகம் : மாண்டு** **தாளம் : ஆதி**

**பல்லவி**

என்னென்ன மாயம் செய்கிறான் - கண்ணன்
அன்னன்ன மென்நடையார் ஆயர்பாடி மங்கையர்க்கு

**அனுபல்லவி**

பின்னல்தனை இழுத்துப் பின்புறமாய் விழுத்தி
கன்னல் அமுதமென கட்டிமுத்தங் கள்அழுத்தி

சரணம்

தாவிப்பிடித்திழுத்து தானென்றாய் நின்றிடுவான்
ஜீவாத்மாவுடன் கலந்த பரமாத்மா வாகிடுவான்
மேவிப் பேரின்பமெனும் மேலான இன்பம் தந்தே
பூவில் வண்ணை வரத ராஜ வெங்கடேசன்.

## 58. கோவர்த்தன கிரிதாரி

**ராகம் : மாண்டு** **தாளம் : ஆதி**

பல்லவி

கோவர்த்தனகிரி தாங்கிய கோவிந்தன்
பாவமகல அருள் பாலிக்கும் பரந்தாமன்

அனுபல்லவி

தேவர் துதிசெய்யும் தெய்வத் திருமாயன்
பூவுலகில் வண்ணை வாழும் வெங்கடேசன்

சரணம்

அருளுரு வானவன் அழகுதவழ் யாதவன்
இருளும கற்றி வாழ்வில் இன்பம் தரும் மாதவன்
திருவளர் வண்ணையிலே திகழும் வரதராஜன்
பெருவரம் நல்கிடும் திருமாலவன் கோவிந்தன்.

## 59. தாயினும் அன்புடையான்

**ராகம் : மாயாமாளவகௌளை** **தாளம் : ஆதி**

பல்லவி

ஆயிரம் நாமம் போற்றிப் பாடு - முரஹரி
தாயினும் அன்புடையான் தண்ணருளும் தருவான்

அனுபல்லவி

தூய வண்ணை வளரும் துரிய வெங்கடேசன்
மாயவன் மாதவன் மணிவண்ணன் கேசவன்

சரணம்

பக்தருக் கிரங்கிடும் பரமத யாளன்ஹரி
சித்தியெல்லாம் தருவன் சிறந்த அருள்கொடுப்பான்
சக்தியாம் மஹாலஷ்மி சேர்ந்திடும் நாராயணன்
அத்திருமால் பதம் அழகு தமிழில் பாடி

## 60. பதம் பிடித்தேன் பரந்தாமனே

**ராகம் : பேகட** **தாளம் : ஆதி**

பல்லவி

பதம் பிடித்தேன் பரந்தாமனே! - அருள்
நிதம் பொழி வண்ணையின் நிமலனே வெங்கடேசா!

அனுபல்லவி

சதம் என நம்பினேன் சந்தமும் உந்தன்
நிதம்வந்து வண்ணைப்பதி நின்றேன் வரதராஜனே

சரணம்

அன்னையும் தந்தையும் அருட்தெய்வமும் நீயே!
என்னைக் காண்பாராயோ எழில் ஹரிகேசவா?
முன்னை பிரகலாதன் முன்வந்தருள் செய்தாய்!
இன்னமும் தாமதம் ஏனோ கோவிந்த ஹரி?

## 61. மத்தகத்தைக் காத்த அச்சுதனே

**ராகம் : சுபபந்துவராளி** **தாளம் : ஆதி**

பல்லவி

எத்தனை கதறினாலும் ஏழையென் மேலுனக்கு
அத்தனை கோபமோ அநந்த நாராயணா?

அனுபல்லவி

மத்தகத்தைக் காத்த அச்சுதனே ரமணா!
நித்தமெனதிடர் நீயறியாயோ கண்ணா?

சரணம்

சந்ததமும் உந்தன் சரணார விந்த மலர்
சொந்த மெனப் பிடித்தேன் சோதனை செய்வதேனோ?
பிருந்தான கோவிந்தா பேரின்ப மருளாயோ?
வந்தாளருள் வண்ணை வரதராஜ வெங்கடேசா.

## 62. சிந்தனைக்கினித்திடும் நந்தமுகுந்தன்

**ராகம் : காமர்ஸ** **தாளம் : ஆதி**

பல்லவி

சிந்தனைக் கினித்திடும் நந்தமுகுந்தனை
வந்தனை செய் மனமே - தினமே

அனுபல்லவி

பந்தமகற்றிடும் பரந்தாமன் கோவிந்தன்
நந்தவ வண்ணையில் நாடும் வெங்கடேசன்

சரணம்

சத்திய மூர்த்தி சங்கு சக்கரதாரி
நித்திய பூரணன் லஷ்மி நாராயணன்
சித்தி தருபவன் ஸ்ரீதரன் மாதவன்
பொற்றிருப் பதிவாசன் பொலியும் வரதராஜன்

## 63. விரிமலர்ப் பதம் தருவான்

**ராகம் : வாஸஸ்பதி** **தாளம் : ஆதி**

பல்லவி

அங்கையில் அபயமும் அழகுறு வரதமும்
சங்குசக்கர மிருக்க அஞ்சுவதேன் மனமே?

அனுபல்லவி

பொங்கர வணையினில் பொலியும் பாற்கடலினில்
மங்கை மஹாலஷ்மி மருவும் நாரணன் கையில்

**சரணம்**

வண்ணை வரதராஜன் வரந்தருவான் ஹரி
நண்ணிடுவார்க்கருள் நயந்து தருவான் அரி
மண்ணிலத்தில் லஷ்மி மருவும் வெங்கடேசன்
விண்ணவரும் போற்ற விரிமலர்ப்பதம் தருவன்.

## 64. நரஸிம்மாவதார மூர்த்தி

**ராகம் : அடானா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நரஸிம்மாவதார மூர்த்தி - அருள்
புரவண்ணைப் பதிவாழும் வரதராஜா அபயம்

**அனுபல்லவி**

சரஜதளநேத்ர சங்குசக் கரதாரி
வரமருளிக் காக்கும் வெங்கட கிரிவாசி

**சரணம்**

பிரஹலா தனுக்கருள் புரிந்த தயாநிதி
அரவணைப் பள்ளிகொள்ளும் அனந்தச யனாகதி
தரணியில் வண்ணையிலே வளரும் வெங்கடேசா
அரவிந்த மலர்ப்பதம் அருளும் கிருபாநிதி

## 65. செந்திருமகிழும் சுந்தரர்

**ராகம் : பௌஹரி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

செந்திரு மகிழும் சுந்தரனே - கண்ணா!
வந்தருள் புரிவாய் வண்ணை வரதராஜா

**அனுபல்லவி**

உந்திகமலஹரி உரகசயனாபதி
தந்தருள்வாய் சுரஹரி வெங்கடேஸ்வரா கதி

சரணம்

துளசிமாலையணியும் தூயமணிமார்மா!
வளமருள்வாய் தேவா அரவிந்த லோசனா!
இளநகை புரிவதும் ஏனோ புரஹரி?
அழகனே குழகன ஆயனே மாயனே!

## 66. மோஹனக் கண்ணன்

**ராகம் : மோஹனம்** **தாளம் : ஆதி**

பல்லவி

மோஹனக் கண்ணா வாராய் - கையில்
மோனக்குழலெடுத்து கான மழைபொழிந்து

அனுபல்லவி

வேகமுடன் காளிங்க நாக படத்திலேறி
ஏக நர்த்தனம் செய்த
பாதவணி கிண்கிணென நாதவொலி செய்திடவே
*(கண்ட நடை)*

சரணம்

ஆயர்பாடியிலே மாயக்குழலிசைத்து
தூயமங்கையரின் உளங்கவர்ந்தாய்!
ஆநிரை மேய்த்து யாதவரைக்காத்து
கோவர்த்தனமலையாம் குடைபிடித்தாய்!
தாயின் மாமன் கம்ஸன் தோயும் உயிர்குடித்து
தூய மாந்தர் தமைக் காத்து நின்றாய்!
சேயென் வினையகல செய்கண் கடைவிழியால்
நீயுமிரங்கியருள்
மாயவனே வெங்கடேசா வண்ணைவளர் வரதராஜா
*(கண்ட நடை)*

## 67. கானவரந்தா

**ராகம் : திலங்** **தாளம் : ரூபகம்**

**பல்லவி**

பூமலர்ப் பதந்தா புராரி முராரி
தேமதுரத் தமிழ் கானவ ரந்தா

**அனுபல்லவி**

பாமலரால் உன்னை பாடிப் புகழ்ந்திட
மாதவ ஸ்ரீதரா யாதவ னேநிதம்

**சரணம்**

வண்ணைப் பதிவளர் வரதராஜனே! என்றும்
எண்ணமெல்லாமுந்தன் எழில் மலர்ப்பாதமே!
வண்ண குழலேந்தும் வெங்கடேஸ்வரனே!
நண்ணுப வர்க்கருள் நல்கிடும் கேசவா!

## 68. வல்லமை அருள்வாய்

**ராகம் : சாருமதி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

கண்ணுக்குக் கண்ணான கண்ணா - தமிழ்ப்
பண்ணுக்குப் பண்ணான பரமதயாளா!

**அனுபல்லவி**

விண்ணுக்கு முதலான விஷ்ணுஹரி முகுந்தா
வண்ணை வரதராஜா வரந்தரும் வெங்கடேசா

**சரணம்**

அல்லும் பகலுமுந்தன் அம்புஜப் பதமலர்
சொல்லும்பொரு ளால்பாடல் சொரிந்திட நீ அருள்வாய்
வல்லமையும் அருள்வாய் வளநிறை வாழ்வருள்வாய்
அல்லல் அகற்றிடுவாய் அநந்த நாராயணா

## 69. மிஞ்சும் அழகு

**ராகம் : ஹமீர்கல்யாணி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நெஞ்சினில் உந்தன் கஞ்ச மலரடிகள்
கொஞ்சி நர்த்தனம் செய்யும் வரதராஜா

**அனுபல்லவி**

செஞ்சதங்கை ஒலிக்க சேவடிதூக்கி ஆடும்
மிஞ்சும் அழகு என்றும் தஞ்சம் அளிக்குதையா

**சரணம்**

கஞ்சனைக் கொன்றனை காளிங்க நர்த்தனம்
பிஞ்சிளம் சேவடி தஞ்சமென் றாடினை!
அஞ்சனமைவிழி வஞ்சியர் காதலை
மிஞ்சிட வேதரும் வண்ணை வெங்கடேசா!

## 70. அநந்த நயனா

**ராகம் : கானடா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நினைந்துருகும் நெஞ்சம் நீயறியாயோ? கண்ணா
கனிந்தவுன் வேணுகானம் காதாரக் கேட்டு உன்னை

**அனுபல்லவி**

அநந்த சயனாஹரி முகுந்தகோவிந்தனே
புனைந்த துளசிமார்பா புரியாதோ என்நிலை?

**சரணம்**

சரணாகதி யடைந்தேன் வரதராஜனே அருள்
தருணம் இதுபுராரி தாமோதராமுரளி
திருவருள் புரியாயோ தீனதயாபரா
திருவளர் வண்ணையிலே திகழும் வெங்கடேசா

## 71. பாம்பணையில் பள்ளிகொண்ட பத்மநாதன்

**ராகம் : திலங்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

செந்தாமரைப் பதம் தருவாய் - முகுந்தா
நந்தாகோவிந்தஹரி நாராயணா உந்தன்

**அனுபல்லவி**

எந்தாயும் தந்தையும் எழிற்குரு தெய்வம் நீயே!
மந்தாரை மலரணி மாயவனே முராரி

**சரணம்**

பாம்பணையில் பள்ளிகொண்ட பத்மநாபனே அருள்
ஆம்பலனைய நயனா அம்புஜம் பதம் நீதா!
பூம்பழச்சோலை மலி புகழ்வண்ணை வரதராஜா
வேங்கடகிரிவாசா வெங்கடே சனே அருள்.

## 72. கருணாமூர்த்தி

**ராகம் : ஸஹானா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

கருணாமூர்த்தி நீயே - கண்ணா!
திருவாழும் வண்ணைப்பதி திகழும் வரதராஜா

**அனுபல்லவி**

சரணார விந்தமே தருவாய் ஹரிகேசவா!
பரமா நந்தனே பத்மநாபனே முரளி

**சரணம்**

கோவர்த்தன கிரியைக் குடையாய் பிடித்தவனே!
தேவர் தமைக்காத்த தெய்வசிந்தாமணியே!
பூமகள்போற்றி செய்யும் ஸ்ரீஹரி முராரி நீயே!
தாமரைப் பதந்தரும் மாயனே வெங்கடேசா!

## 73. அரங்கா நீயும் இரங்காயோ?

**ராகம் : ஹிந்தோளம்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

அரங்கா நீயும் இரங்காயோ? - ஹரி
தரங்கமாம் பாற்கடல் தனில்வளர் வரதராஜா

**அனுபல்லவி**

கரங்கூப்பி நின்னையே காதலால் நான் பணிந்தேன்
சிரந்தாழ்த்திச் சேவடி வரந்தர நான் பிடித்தேன்.

**சரணம்**

கரந்தனில் சங்குசக் கரந்தாங்கும் ஸ்ரீதரா!
பரந்த மனமுடையாய் பரந்தாமனே அருள்வாய்!
விரிந்த படவரவிற் சிறந்த பள்ளிகொள்ளும்
அநந்த நாராயணா வண்ணை வெங்கடேசா!

## 74. புகலிடமாயடைந்தேன்

**ராகம் : ஹம்ஸாநந்தி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

புகலிடமாயடைந்தேன் முராரி - இந்த
இகமதில் நினதிரு இணையடி துணையென

**அனுபல்லவி**

திகழும் வண்ணைப் பதியில் திருமகளுடன் மருவும்
வரதராஜனே அருள் வாரிதி நீயல்லவோ?

**சரணம்**

வெங்கடேசா சரணம் சங்கசக்ரதாரியே!
மங்கள மஹாலஷ்மி மருவிடும் நாயகா!
அங்கையிலே அபயம் அருளும் நாராயணா!
பங்கயப் பதமலர் பற்றினேன் அருள் நீதா!

## 75. சிந்தனை செய்மனமே

**ராகம் : சங்கராபரணம்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

எந்தநேரமும் நந்த முகுந்தனை
சிந்தனை செய்மனமே - தினமே

**அனுபல்லவி**

விந்தையாய் மோஹன வேணுகா னமிசைத்து
சிந்தைகுளிரச் செய்யும் ஸ்யாமள வண்ணனை

**சரணம்**

மந்தைகள் மேய்த்திடும் மாயாவதாரரன்
மங்கையரின் மனதை மயக்கிடும் லோலன்
மங்கள லஷ்மி மருவிடும் வரதராஜன்
எங்கணும் வண்ணையின் எழில் வெங்கடேசனை

## 76. நவநீதம் திருடிய நாராயணா

**ராகம் : நாதநாமக்ரியா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நவநீதம் திருடிய நாராயணா - வண்ணை
தவமான தலமுறை தாமோதரா அருள்!

**அனுபல்லவி**

பவசாகரம் நீக்கும் பத்மநா பாஹரி
மகாதேவி மஹாலஷ்மி மருவும் வெங்கடேசா!

**சரணம்**

உள்ளமுருகி உன்னை உவந்து நான்பாட அருள்
கள்ளவெண்ணை திருடும் கண்ணனே வந்தருள்
தெள்ளத்தெளிந்த மனம் தினமெனக்கு நீ அருள்
வள்ளை ஏந்தும் வண்ணை வரதராஜனேஹரி

## 77. கரதலத்தை தூக்கியருள்

**ராகம் : பந்துவறாலி** **தாளம் : கண்டசாபு**

**பல்லவி**

திரிகரண சுத்தியொடு தினமுமுனைப் பணிந்திடவே
வரமுமெனக்கருளிடுவாய் வண்ணைப்பதி வெங்கடேசா

**அனுபல்லவி**

மரணபயமொழித்தருளும் மாயவனே தூயவனே!
வரதராஜப் பெருமான் கரதலத்தை தூக்கியருள்

**சரணம்**

முன்னம் பிரகலாதனன் நன்னயமாய் கூவிடவே
அன்னவனுக்கருள் செய்தாய் ஆதி வெங்கடேஸ்வரனே
உன்னடியை நம்பினேன் உவந்தருள்வாய் கேசவனே
பன்னகத்தில் பள்ளிகொள்ளும் பதுமநாபப் பரம்பொருளே.

## 78. ஜீவாதார மூர்த்தி

**ராகம் : காபி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

ஜீவாதார மூர்த்தி - என்னைக்
காவாதிருப்பதழகோ? வண்ணை

**அனுபல்லவி**

பூரவாரம் சூட்டியுந்தன் பொன்னடிக ளணிவித்தே
பாவாரம் சூட்டவருள் பத்மநாப வெங்கடேசா

**சரணம்**

கெஞ்சிக் கெஞ்சியழைத்தால்
    மிஞ்சுவதும் அழகோ?
செஞ்சிலம் பலம்பிட
    சேய்க்கருள்தர வருவாய்
வஞ்சிமஹாலஷ்மி
    வருடிடும் வரதராஜா
அஞ்சலென அபயம்
    அருள்வாய் கோவிந்தா!

## 79. உருகுவதறியாயோ

**ராகம் : பெஹாக்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

உருகுவதறியாயோ - உலகளந்த
பெருமாளே வரதராஜா பெருகும் பக்தியால் மனம்

**அனுபல்லவி**

திருவருள் புரியாயோ திருமாலே வெங்கடேசா?
திருவளர் வண்ணையிலே திகழும் ஸ்ரீநிவாசா

**சரணம்**

அரவிந்தப் பாதமலர் அருச்சிக்க நீ அருள்வாய்!
அரவணை துயிலுமால் அநந்த நாராயணா
கரமலர் தூக்கியருள் கண்ணனே கேசவா!
வரமருளி எனக்கு வாழ்வருள் மாயவா!

## 80. அரவிந்த முகத்தழகு

**ராகம் : ஆனந்தபைரவி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வெண்ணைபோல் என்மனதை உருக்குகிறாய் - கண்ணா!
வண்ணை வரதராஜா வரமருள்வாய் நந்தா

**அனுபல்லவி**

கண்ணையனே முகுந்தா ஹரிகேசவா கோவிந்தா
விண்ணவர் போற்றும் மஹா விஷ்ணு நாராயணா

**சரணம்**

ஆதிசேடனழகும் அரவிந்த முகத்தழகும்
நாபிக்கமலமதில் நாயகன் அயன் அழகும்
மாதுலஷ்மியழகும் மன்னிடும் நகையழகும்
போதவிழ்பதவழகும் பொலிறும் வெங்கடேசா.

## 81. கண்ணுள் நிறைந்தவனே

**ராகம் : கௌரிமனோகரி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நெக்குநெக்காயுருக்கும் நின்னழகு - கண்ணா
திக்கு வேறெவருமில்லை திருவருள் நீ புரிவாய்

**அனுபல்லவி**

மிக்க புகழ்வண்ணையிலே மிளிரும் வரதராஜா
தக்கதுணை நீயே தாமோதரா அருள்வாய்

**சரணம்**

மண்ணுலகில் உந்தன் மலரடியே கதியே!
விண்ணவர் ஏத்து மஹா விஷ்ணுவே நீதுணையே
பண்ணமுதம் பாடி பக்திமலர் சூட்டவருள்
கண்ணுள் நிறைந்தவனே கண்ணனே வெங்கடேசா.

## 82. பத்மநாபா சரணம்

**ராகம் : சுபபந்துவராளி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

புன்னகை காட்டியே என்னை உருக்கிடும்
பன்னக வாஹனா பத்மநாபா சரணம்

**அனுபல்லவி**

நன்னகர் வண்ணையின் நாதனே வெங்கடேசா
இன்னமும் தாமதம் ஏனோ தயாபரா?

**சரணம்**

இணையடிகள் தருவாய் இறைவா வரதராஜா
துணையென நம்பினேன் தூயனேமாயவனே!
மணமகள் மஹாலஷ்மி மருவிடும் கோவிந்தா!
அனவரதமும் உந்தன் அம்புஜ இதழ்தவமும்.

## 83. பக்திக்கு உருகிடும் பரந்தாமன்

**ராகம் : ஸாவேரி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

பக்திக்கு உருகிடும் பரந்தாமன் - கண்ணன்
எத்திக்கும் புகழ் வண்ணை எழில் வரதராஜன்

**அனுபல்லவி**

தித்திக்கும் அவன் நாமம் திருமால்புகழ் மாயன்
சித்திக்கும் ஜெமருளும் சிறந்த தயாளகுணன்

**சரணம்**

கோவிந்தா நாராயணா முகுந்தாகண்ணா என்றே
பூவில்பக்தி செய்ய புகலிடம்தர வருவாள்
நாபிக் கமலநாதன் நாரணன் அச்சுதன்
ஸ்ரீநிவாசன் வண்ணை வெங்கடேசப் பெருமாள்.

## 84. எல்லாமே உந்தன் சொந்தம்

**ராகம் : சுருட்டி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

எனக்கும் உனக்கும் என்ன பந்தம்? - நாராயணா
எனதுனதென்பதேது? எல்லாமே உந்தன் சொந்தம்!

**அனுபல்லவி**

கனக்குழை அணிந்திடும் தனலஷ்மி கணவனே
மனக்குறை யகற்றிடும் மாலே வரதராஜா

**சரணம்**

எழில்நகர் வண்ணையில் என்றும் அருள்புரியும்
செழுமலர்ப் பாதனே ஜனார்தனா வெங்கடேசா
குழலிசை பொழிந்திடும் கோவர்த்தன தாரி
கழலடி துணையெனக் கதறும் எனக்கருள்வாய்.

## 85. திசையேதும் யானறியேன்

**ராகம் : ஹமீர்கல்யாணி** **தாளம் : ஆதி**

பல்லவி

பசுமாடு மேய்த்திடும் பரந்தாமா! - கண்ணா!
வசுதேவா வண்ணையின் வரதராஜா அருள்வாய்

அனுபல்லவி

திசையேதும் யானறியேன் திருமாலே வெங்கடேசா
புவிமீதில் கதிநீயே முராரி ஸ்ரீநிவாசா

சரணம்

அட்டதிசையும் போற்றும் அநந்தநாராயணா
இட்டமுடன் எனக்கு இன்னருள் சுரந்திருவாய்
பட்டுப் பீதம்பரா பரந்தாமா கோவிந்தா
துஷ்டநிக்கிரக சிஷ்டபரி பாலனா

## 86. அபயம்

**ராகம் : சாமா** **தாளம் : ஆதி**

பல்லவி

தீனபந்து நீயே - திருமாலே
மோனமூர்த்தி வேணு கான மூர்த்திமாயா

அனுபல்லவி

தானதர்மலஷ்மி தழுவும் வெங்கடேசா
ஞான முதல்வனே நீ ஸ்ரீநிவாசமூர்த்தி

சரணம்

அபயம் அபயமென அபலை கத்துவதுன்
செவியில் விழவில்லையோ புவியில் வண்ணைநாதா?
தபஜெபார்க் களைக்குருகும் தாமோதரனே அருள்
வரதராஜப் பெருமாள் வண்ணை வெங்கடேஸ்வரா.

## 87. சித்தமிரங்கவில்லையா?

**ராகம் : ரஞ்ஜனி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

சித்தமிரங்கவில்லையா? - ஸ்ரீநிவாசா
மத்தக ஜத்தைக்காத்த மாதவனே வெங்கடேசா

**அனுபல்லவி**

அத்தனே அழகனே அநந்த நாராயணா!
முத்தியளிக்கும் விஷ்ணு மூர்த்தியே பதமருள்வாய்

**சரணம்**

அழகு வண்ணைப்பதி அமரும் வரதராஜா
கழலடி நீதருவாய் கண்ணா ஜனார்த்தனா
குழலிசை அமுதூதி குளிர்ந்திடச் செய்திடுவாய்
நிழலடி நீதருவாய் நிரஞ்சனா ரஞ்ஜனா.

## 88. கானமதுரம் பொழியும் கண்ணன்

**ராகம் : வலஜி** **தாளம் : ரூபகம்**

**பல்லவி**

கமலரின் திருவே - வண்ணை
அமரும் அநந்த சயனா அருள்வாய்

**அனுபல்லவி**

நிமலனே நந்த முகுந்த - கேசவா
நிழலடி என்றும் சரண டைந்தேனே.

**சரணம்**

மதுரப்பாடல் அருள்வாய் - கானம்
மதுரமாகப் பொழிவாய் - மோனம்
தவழும் வரத ராஜா - வண்ணை
மருவும் வெங்கடேசா சரணம்.

## 89. யதுகுலதிலகன்

**ராகம் : மாண்டு** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மதுரகுழல் கானம் பொழிகின்றான் - கண்ணன்
யதுகுலதிகன் யாதவன் வெங்கடேசன்

**அனுபல்லவி**

மதுரவிதழ் தனிலே மாயக்குழல்வைத்தே
அதிரஸகானம் அவனிமயங்கிட

**சரணம்**

திக்கனைத்தும் அவன் தீங்குழலில் மயங்க
தக்கதஞ்சமென்று தாமரைப்பதம் வீழ
துக்கமெலாம் மறக்க தூய மாயன் உயிர்களை
எக்கணமும் வண்ணைப் பக்கம் வளர் வரதராஜன்.

## 90. கண்ணாரக் காண்பேனோ?

**ராகம் : ஸாரங்கா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

கண்ணாரக் காண்பேனோ? - கண்ணனை
கண்ணா கண்ணா என்றே கழலடி பிடித்தேநான்

**அனுபல்லவி**

விண்ணோர்கள் தொழுதேத்தும் விஷ்ணு ஹரிமாயன்
பண்ணோடு தமிழ்பாட பரிந்து வரும் அந்நாள்

**சரணம்**

சித்தமெல்லாம் உருக்கும் ஸ்ரீநிவாசன் கானம்
பக்தி பெருக்கியே பரவச மூட்டிடும்
சத்துதினக்கடல் கார்முகில் சொரிவண்ணைத்
தத்துவன் வெங்கடேசன் சித்தன் நாரணனைக்

## 91. செங்கை ஆழியான்

**ராகம் : ஸாரங்கா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மாதவனே கேசவா - வண்ணை
ஆதி நாராயணா அநந்தசயனா அருள்

**அனுபல்லவி**

யாதவகுலதிலகா மாயனே கோவிந்தா!
பூதலநாயகா பூமகளின் கணவா

**சரணம்**

செங்கை ஆழியானே சேவடி நீ தருவாய்!
பொங்கும் பாற்கடலிலே பொலியும் ஸ்ரீநிவாசா
மங்களரூபனே மாலே வெங்கடேசா!
எங்கள் குறைதீர்க்கும் எழில் வரதராஜா!

## 92. என்னகுறை?

**ராகம் : பலயமாருதம்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வண்ணை வரதராஜன் வரந்தரும் கையிருக்க
என்னகுறையுமில்லை இச்செகத்தில்

**அனுபல்லவி**

மண்ணை அள்ளி உண்டு மாயம் செய்த கண்ணன்
விண்ணை அளந்தவன் விஷ்ணுவும் ஆனவன்

**சரணம்**

அன்னையும் அவனே அப்பனும் ஹரியே!
இன்னமு தக்குருவும் இறைவனும் அவனே!
சொன்னயப் பொருள்நயம் சொரிந்த கவிதைதரும்
மன்னனும் அவனே மாயவன் வெங்கடேசன்.

## 93. திருவருள் புரிந்தருள்

**ராகம் : ஆபேரி** **தாளம் : ஆதி**

பல்லவி

ஹரி நாராயண கோவிந்தா - வண்ணை
புரிவாழும் முராரி பதமருள்வாய் முரளி

அனுபல்லவி

திரிலோகமும் புகழும் தீனதயாபரா
விரிமாமலர் நயனா விஷ்ணுகிரி - தாரி

சரணம்

சக்கரம் சங்கொடு நற்கரத்தில் தாங்கி
திக்கெலாம் காத்திடும் திருமாலே வரதராஜா
தக்கதுணை நீயே தயாபரா வெங்கடேசா
திக்கெவரும் இல்லேன் திருவருள் புரிந்தருள்

## 94. மணிவண்ணன் புகழ்பாடு

**ராகம் : கேதாரகௌளை** **தாளம் : ஆதி**

பல்லவி

மணிவண்ணன் புகழ்பாடு - மனமே
அணிமார்பில் துளப மணிமாலை சூடும் அரி

அனுபல்லவி

பணிவான பக்தியுடன் பரந்தாமன் பதம் பாடு
பிணியாவும் தீர்த்திடுவான் பீதாம்பரதாரி

சரணம்

திருமாலை தொடுத்தேநீ தினம் பாடி மனம்நாடி
திருமாலின் பதம் சூடி பெருமானைப் போற்றிசெய்
அருமாமறைகள் போற்று அரி வெங்கடேஸ்வரன்
வரமாமழை பொழிவான் வரதராஜப்பெருமாள்.

## 95. பன்னகவாஹனன்

**ராகம் : ஸிம்மேந்திரமத்யமம்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்
தூய நரசிம்மன் மாயவன் வெங்கடேசன்

**அனுபல்லவி**

பேணியே அவன்பதம் போற்றிசெய்வாய் மனத்தில்
ஆணிவே ரெனவே அரிவீற்றி ருப்பான்

**சரணம்**

நன்னகர் வண்ணையிலே நாளும் அருள் புரியும்
வன்னமயிற் பீலியணி வரதராஜப் பெருமாள்
பன்னக வாஹனன் பக்தர்க்கி ரங்கிடுவான்
நன்னயமாய் அருள் நாடிச்சு ரந்திடுவான்.

## 96. ஆனந்த வெங்கடேசன்

**ராகம் : பைரவி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

அரிஇருக்கப் பயமேது? - அவனியில்
புரிவண்ணைத் திருமால் புனிதப்பதம் இருக்க

**அனுபல்லவி**

கரியமணிவண்ணன் கண்ணையன்முரளி
அரியஅருள்கொடுத்து அபயமும் தந்திடுவான்

**சரணம்**

நல்வரம் தந்திடுவான் நாதன் வரதராஜன்
பல்விதமாக உன்னைப் பாலித்தருள் தருவான்
செல்விலஷ் மியின் கணவன் சேவடி நல்கிடுவான்
அல்லும்ப கலும்அரி ஆனந்த வெங்கடேசன்.

## 97. நால்மறை போற்றிடும் நாயகன்

**ராகம் : ஆபேரி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நால்மறை போற்றிடும் நாயகன் - வண்ணை
மாலவன் மாதவன் யாதவன் நாரணன்

**அனுபல்லவி**

சேல்விழி செந்திரு சேவை செய்யும் நாதன்
பால்கடல் தன்னிலே பள்ளிகொள் பரந்தாமன்

**சரணம்**

அச்சுத னைப்பாடு அவன்கழல் நீ நாடு
மெச்சு புகழ் வரத ராஜன் வெங்கடேசன்
இச்செகத்தில் இன்பம் இறைஞ்சிடுவான் மாயன்
அச்சமகற்றும் ஆயன் அழகு ஸ்ரீநிவாசன்

## 98. சுத்தமனம் தருவான்

**ராகம் : தோடி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வெற்றியளித்திடும் விஷ்ணுமூர்த்தி - என்றும்
நற்றிருப் பாதத்தை நாடிடுவாய் மனமே

**அனுபல்லவி**

பற்றிடும் பவவினை பரந்தாமன் தீர்த்திடுவான்
கற்றவர் வாழ் வண்ணைக் கண்ணன் வெங்கடேசன்

**சரணம்**

பொற்றிருப் பாதமலர் போற்றியே நீபாடு
அத்திரு மாலுக்கு அவனியில் ஆர் ஈடு
சித்தமகிழ் அழகிலஷ்மி சிறந்த அருள் நாடு
சுத்தமனம் தருவான் அத்தன் வரதராஜன்

## 99. வேணுகோபாலன் செய்த விஷமக் குறும்பு

**ராகம் : கல்யாணவஸந்தம்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வேணுகோபாலன் செய்த விஷமக் குறும்புகளை
யாரிடம் சொல்வேனடி? - யசோதா

**அனுபல்லவி**

வாணுதல் மங்கையரை வாரியணைத்திடுவான்
காணுதியோ எனக் கட்டிமுத் தமிடுவான்

**சரணம்**

நீராடும் நதிக்கரையில் நங்கையர் நீராடுகையில்
கோபாலன் சேலைகளைக் கொண்டோடி னானடி
சேலாடும் விழிமாதர் சேலைகள்கா ணாது நொந்தார்
மாலான மணிவண்ணன் மரமமர்ந்தே நகைத்தான்

பானையிலே பாவையர்கள் பால்தயிர் சுமந்து செல்லும்
வேளையிலே கல்லெறிந்து பானைகளு டைப்பானடி
ஏனையனே என்றலற எதும்புபிடித்து மாதர்
வாயினிலே போட்டுக் கண்ணன் ஏளனமும் செய்வானடி

கண்ணையனை நீயும் என்றும் கட்டி வளர்த்திடடி
மண்ணையள்ளிவாரி உண்ட மாயன் இவன்தானடி
வெண்ணை திருடியுண்ணும் வேணுகோ பாலனடி
வண்ணை வெங்கடேச வரதன் இவன் தானடி!

## 100. குழலூதி விளையாடிவா

**ராகம் : பாகேஶ்ரீ** **தாளம் : ஆதி**

**பல்லவி**

குழலூதி விளையாடிவா - கண்ணா
அழகான மயிற்பீலி அசைந்துன்முடியாட

**அனுபல்லவி**

கழல்மேவும் கிண்கிணி கணீரெனும் ஒலிசெய்ய
முழவாய் கோபியர் கர மத்தொலி ஓங்கிட

**சரணம்**

பண்ணைப் பசுக்களிலே பாலூட்டும் கோல எழில்
வெண்ணை திருடுமந்த விஷமக்குறும்பழகும்
எண்ணஇனிக்குதடா இதயம் களிக்குதடா
வண்ணைப்பதியழகா வரதராஜா புல்லாங்

## 101. மந்தைகள் மேய்த்திடும் கண்ணா

**ராகம் : தேஷ்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மந்தைகள் மேய்த்திடும் கண்ணா - இந்த
விந்தைபுரிவதேனோ ஸ்யாமள வண்ணா?

**அனுபல்லவி**

தண்டைகலகலெனக் கொஞ்சநடை நடந்து
அண்டை அயலிலெல்லாம் அட்டகாசங்கள் புரிந்து

**சரணம்**

மண்ணை அள்ளிஉண்டு மாயங்கள் செய்கிறாய்!
மாதா உரலில்கட்ட மரத்தை விழுத்துகிறாய்
வெண்ணை திருடி உண்ண வீடெல்லாம் திரிகிறாய்
வேணுகோபாலா வண்ணை வெங்கடேசா அருள்வாய்

## 102. தசாவதாரவிருத்தம்

**ராகம் : கேதாரகௌளை**

நால்வேதம் அபகரித்து
நடுக்கடலில் கொண்டொழித்த சோமுக
நயவஞ்ச அரக்கனையே
நாடிவந்து வதம் செய்ய மத்ஸமானாய்

பாலமுதம் கடைந்திடவே
பாற்கடலுள் மலைதாங்கும் கூர்மமானாய்
ஆலிலைமேல் துயின்றந்த
ஆழியமிழ் ஏழுலகம் காத்துவொரு வராகமானாய்

பாலனையே ஆண்டருள
இரணியனைக் கொன்று நரசிங்கமானாய்
மூவடியால் மூவுலகம்
அளந்துபலிக் கருளிய வாமனனுமானாய்

கோலமுறு க்ஷத்திரியே
குலமொழிக்க நற் பரசுராமனானாய்
கோதண்ட ராம பல
ராமகிருஷ்ண கல்கியாம வண்ணைமூர்த்தி

## 103. மயல்மீறும் எனைப் பாராயோ?

**ராகம் : காபி　　ஜாவளி　　தாளம் : ஆதி**

**பல்லவி**

நீயிது தருணம் வருவாயே - மயல்
மீறும் எனைப் பாராயோ கண்ணா!

**சரணம்**

கோபியர் கொஞ்சிடும் கண்ணா!
　கோகுலனே மணி வண்ணா!
மேவியெனை அணைப்பாய்
　மோகமும் தானே
மோஹன முரளி கானா - லோலா!

மேனி கொதிக்குதே பாராய்! எந்தன்
　மோஹத்தைத் தீர்த்திட வாராய்!
ஆனிரை மேய்த்திடுவாய்!
　தேனின் குழலிசைப்பாய்!
ஆனந்தந் தந்தாள வாராய்! தாராய்!

செங்கை வளை சோர்ந்து வீழ எந்தன்
சிந்தை குடிவைத்து வாழ!
மங்கை எனை மருவ!
அங்கையினால் அணைக்க!
வெங்கடேசா வண்ணை வரத ராஜா - நீவா.

## 104. வேணு கோபாலன்

**ராகம் : பெஹாக்** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வேணுகோபாலனுக்கு வாரிக்குழல் முடித்து
வாணுதல் விழிமையிட்டு வடிவழகு கண்டேன்

**அனுபல்லவி**

பூணும் பொன்னணியெல்லாம் பொலிவுற அலங்கரித்தேன்
தோகைமயிலிறகைச் சொருகி முடியில்வைத்தேன்

**சரணம்**

சின்னஞ்சிறு காலில் செஞ்சதங் கைகட்டி
வண்ணச் செந்தூரத்தில் வடிவுத் திலகமிட்டேன்
வண்ணை வடிவழகன் வரதராஜன் எந்தன்
கன்னம் சிவக்க முத்தம் கனிந்து தந்தானடி

## 105. ஏகாதசி எனும் பெருநாள்

**ராகம் : மத்யமாவதி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

நாராயணன் அருளும் திருநாள் - மார்கழி
ஏகாதசியெனும் பெருநாள் வைகுந்த

**அனுபல்லவி**

பாராயணம் செய்ய பாடியவனைத்துதி
ஆராதனை செய்ய அவன் தருவான் கதி

சரணம்

தூயதுளசிதூவி நாமந்தனைப் பாடு
மாயவன் பாதமலர் மனமார நீ நாடு
வாயதில் வெண்ணைகமழ் வண்ணை வரதராஜன்
வேயின் குழலிசைக்கும் வெங்கடேசன் அருள்வான்.

## 106. மங்களம் அருள்வார்

**ராகம் : மத்யமாவதி** **தாளம் : ஆதி**

பல்லவி

மங்களம் அருள்வான் மாதவன் - அவன்
பங்கஜப் பதம் துதி நாளுமே மனமே

அனுபல்லவி

பொங்கரா வாஹனன் பொலியும் பரிபூரணன்
மங்களச் செல்வியாம் மஹாலஷ்மி நாயகன்

சரணம்

மாதமும்மாரி வாழி மலிவளம் வாழி செங்கோல்
பூதலத்தினில்வாழி புண்ணிய அடியார் வாழி
மாதவன் வெங்கடேச வரதராஜனும் வாழி
மாநகர் வண்ணை வாழி யாவரும் வாழிவாழி.

*"சுபம்"*

*"மங்களம்"*





யாழுது வண்ணையின் உயர்கோபுரக்
கோயிற் காரெமு வண்ணனாம்
கண்ணன் வெங்கடேஸ்வரன்
பாரதக் கதையிலே கீதையும்
சொன்னவன் பாதமலரினை
புந்தியில் வைப்பேனே.



- மஹாவித்துவான் மா.த.ந.வீரமணி ஐயர் -
எம்.ஏ.ஜே.பி.

சிவரஞ்சனம். 077 3068982